இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 03-07-2025

# வெற்றி நிச்சயம்! வெற்றி நிச்சயம்!!

திராவிட மாடல் அரசு இளையோர் அரசாக இருக்கிறது. அறிவின் அரசாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்படும் முத்திரைத் திட்டங்கள் அனைத்தும் இதைத் தான் சொல்கிறது.

**நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், கல்லூரிக் கனவு, அனைவர்க்கும் ஐ.ஐ.டி போன்ற ஒவ்வொரு திட்டமும் பல ஆண்டுகள் கழித்து அல்ல, சில மாதங்களிலேயே அதற்கான பலனையும், பயன்பாட்டையும் அடைந்து வருகின்றன.**

**நான் முதல்வன் திட்டமானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டம் ஆகும். இன்றைக்குத் தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகிறது. தமிழ்நாட்டுக்கு ஏராளமான நிறுவனங்கள் வரும் போது அதில் பணியாற்றத் தேவையான திறமை சாலிகளை உருவாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் நினைத்தார்கள். அதற்காக அவரால் உருவாக்கப்பட்டதுதான் 'நான் முதல்வன்' திட்டம் ஆகும். மாணவ, மாணவியர் அனைவரும், இளைஞர்கள் அனைவரும் அனைத்துத் திறமைகளையும் கொண்டவர்களாக வளர வேண்டும் என்று அவர் நினைத்தார். ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தேவையான தனித்திறமைப் பயிற்சியைப் பெற்றார்கள். உலகளாவிய நிறுவனங்கள் இந்தப் பயிற்சியை வழங்கியது.**

இதுவரை தமிழ்நாட்டில் 41 இலட்சம் இளைஞர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெற்ற 3,28,393 மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் பணி நியமனம் பெற்றுள்ளனர். கலைக்கல்லூரிகளில் படித்தவர்கள், பொறியியல் கல்லூரிகளில் படித்தவர்கள், பாலிடெக்னிக் கல்லூரியில் படித்தவர்கள் என அனைவரும் இதில் இருக்கிறார்கள். வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து இவர்களுக்குப் பயிற்சி அளித்ததால், இந்த மாணவர்கள் வெளிநாடுகளிலேயே பணி நியமனம் பெறுவதற்கும் இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.

இதேபோல் போட்டித் தேர்வு பயிற்சிகளும் தரப்பட்டது. இந்த ஆண்டு குடிமைப் பணித் தேர்வில் வென்ற 57 பேரில் 50 பேர் 'நான் முதல்வன்' திட்டத்தால் பயன்பெற்றவர்கள். ஒன்றிய அரசுப் பணிக்கும் பயிற்சி தரப்பட்டது. இந்த ஆண்டு 58 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். மாணவர்களுக்கு மட்டுமல்ல; பேராசிரியர்களுக்கும் பயிற்சி தரப்பட்டு வருகிறது. நகரங்களில் மட்டுமல்ல; கிராமப் புறங்களிலும் இப்பயிற்சி தரப்படுகிறது.

'நான் முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர்கள் பல்வேறு கண்டுபிடிப்புகளை நிகழ்த்திக் காட்டி இருக்கிறார்கள். புதிய தொழில் நுட்பங்களை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த திருவிழாவும் நடைபெற்றுள்ளது.

**இந்த வரிசையில், 'வெற்றி நிச்சயம்' திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் தொடங்கி வைத்துள்ளார்கள். தொழில் துறை சார்ந்த பயிற்சிகள் இலவசமாக இளைஞர்களுக்கு கிடைக்கப் போகிறது. உலகத் தரம் வாய்ந்த முன்னணி பயிற்சி நிறுவனங்கள் இதனைத் தரப்போகின்றன. 18 வயது முதல் 35 வயதுள்ள, படித்த, வேலையில்லாத இளைஞர்கள், பள்ளி அல்லது கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் இத்திறன் பயிற்சி திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இவர்களுக்கு மாதம் 12 ஆயிரம் ஊக்கத்தொகையாகக் கிடைக்கும். இந்த பயிற்சி பெற்றவர்கள் 'Skill Wallet' கைபேசி செயலி (Mobile App) மூலம் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பணியாளர்களைத் தேடுவோர், இந்த செயலியைப் பயன்படுத்தி பணியாளர்களைத் தேர்வு செய்து கொள்ளலாம். இப்படி பல்வேறு வகையான வழிமுறைகளைச் செய்து தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

"நல்லா படிச்சா வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் கல்லூரியில் சேர்ந்தேன். ஆனால் தொழில்நுட்பத்தின் திறமை இருந்தால்தான் நல்ல வேலை கிடைக்கும் என்பதை 'நான் முதல்வன்' திட்டம்தான் எனக்கு உணர்த்தியது. கிராமப்புறத்தில் ஒரு விவசாயியின் மகனாகப் பிறந்த எனக்கு இன்று ஆண்டுக்கு 28 லட்சம் ஊதியத்தில் வேலை கிடைத்துள்ளது என்றால் அதற்கு 'நான் முதல்வன்' திட்டம்தான் காரணம்" என்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த வினீத் என்ற மாணவர் சொல்லி இருக்கிறார்.

"படித்தால் வேலை கிடைக்குமா என்ற ஏக்கத்தோடு நான் கல்லூரியில் சேர்ந்தேன். ஆனால் இன்று இன்போசிஸ், டெக் மகேந்திரா ஆகிய இரண்டு பெரிய நிறுவனங்களின் அழைப்பு என் கையில் இருக்கிறது. 'நான் முதல்வன்' திட்டம் அளித்த பயிற்சியே இதற்குக் காரணம்" என்று சொல்லி இருக்கிறார் லயோலா கல்லூரி மாணவி லினோட்.

வாய்ப்பு இருப்பவர்கள் முன்னேறி வந்தார்கள் இதுவரை. ஆனால் இன்றைய முதலமைச்சர் அவர்கள் வாய்ப்பை உருவாக்கி வருகிறார்கள். உருவாக்கித் தருகிறார்கள். அனைவருக்கும் சமவாய்ப்பு தரப்படுகிறது. இதுதான் உண்மையான சமநீதி ஆகும். உண்மையான சமூகநீதி ஆகும்.

"வெற்றி நிச்சயம் திட்டம், தமிழ்நாட்டு இளைஞர்களின் வெற்றியை உறுதிப்படுத்தும்" என்று பெருமிதத்துடன் சொல்லி இருக்கிறார் துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்கள். அவரது துல்லியமான முன்னெடுப்புகளால்தான் இத்தகைய அறிவு வளர்ச்சியை தமிழ்நாடு பெற்று வருகிறது.

**"உழைப்பு இருந்தால் வெற்றி நிச்சயம். திறமை இருந்தால் வெற்றி நிச்சயம். உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம். வெற்றி நிச்சயம்,வெற்றி நிச்சயம்" என்ற முதலமைச்சரின் முழக்கமானது இளைஞர்கள், மாணவர்களுக்கானது மட்டுமல்ல. இதுபோன்ற திட்டங்களால் தமிழ்நாட்டுக்கு வெற்றி நிச்சயம். மாண்புமிகு முதலமைச்சருக்கு வெற்றி நிச்சயம்.**




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.7.2025) திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேலூர் மாவட்டம் காட்பாடி வடக்கு பகுதி செயலாளர் ஜி.வன்னியராஜா மகள் வ.விஷ்ணுபிரியா – ஹெச்.சுரேஷ்குமார் இணையரின் திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் கழகத்தின் பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்ட கழக செயலாளர்கள் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, க.தேவராஜி எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர்.எஸ்.ஜெகத்ரட்சகன், டி.எம்.கதிர் ஆனந்த், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், திருமதி அமுலு விஜயன், ஜே.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், துணைமேயர் மா.சுனில்குமார், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜமார்த்தாண்டன், மாநகர அமைப்பாளர் ரவிக்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

### மடப்புரத்தில் மரணமடைந்த அஜித்குமார் தாயார் மாலதியிடம் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கினார்!

# சகோதரர் நவீன்குமாருக்கு அரசுப் பணி நியமன ஆணை!

## முதல்வர் உத்தரவின்படி அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் வழங்கினார்!

**சிவகங்கை, ஜூலை 3-**

**சிவகங்கை மாவட்டம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணமடைந்த அஜித்குமார் சகோதரருக்கு பணி நியமன ஆணையினையும் அக்குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும் நேரில் சென்று வழங்கினார்.**

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம், நேற்றையதினம் (01.07.2025) அலைபேசியின் வாயிலாக தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் சகோதரருக்கு, நேற்றையதினம் (2.7.2025) பணி நியமன ஆணையினையும், அக்குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும் நேரில் சென்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார் உட்பட பலர் உள்ளனர்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நேற்று (2.7.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் ஆகியோர் முன்னிலையில், பணி நியமன ஆணையினை மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமார் (வயது 27) அவர்களுக்கு, சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், காரைக்குடி டெக்னீசியன் பணியிடத்திற்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை வழங்கினார்.

மேலும், தேளி வருவாய் கிராமத்திற்குட்பட்ட புல எண். 4011ன் படி 0.01.20 ஏர்ஸ் (3சென்ட்) பரப்பளவில், அஜித்குமார் தாயார் திருமதி மாலதி அவர்களுக்கு வீட்டுமனை பட்டாவிற்கான ஆணையினையும் வழங்கினார்கள்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், திருப்புவனம் வட்டாட்சியர் விஜயகுமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாவட்ட தி.மு.க. சார்பில் ரூ.5 இலட்சம் நிதி!**

மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் ரூபாய் 5 லட்சம் நிதி உதவியினை அஜித்குமாரின் குடும்பத்தாரிடம் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமினை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொல்.திருமாவளவன் எம்.பி., ஆகியோர் கலந்து கொண்டு, தொடங்கி வைத்தனர். இதில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ம.பிரபாகரன் (பெரம்பலூர்), கு.சின்னப்பா (அரியலூர்), க.சொ.க.கண்ணன் (ஜெயங்கொண்டம்) ஆகியோர் உள்ளனர்.

